**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ -வீதி) - 2023**

------------------------------------------------------------------------------------------------------------------------

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை, 2015 மே 28 ஆம் திகதிய 3221 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3222 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் கடன் இலக்க கடன் உடன்படிக்கை 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய 3325 - எஸ்ஆர்ஐ மற்றும் 3326 - எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 3610 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கை ஆகியவற்றின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பது நீண்டகால விளைவாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 906 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 800 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 13,780 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2024 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயப் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக்காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஐ வீதி II இற்கான இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்களிற்கான பொடுப்பனவானது உள்ளக நடைமுறைக்கணக்கு மற்றும் பிடிப்புக் கணக்கிற்கு முறையே செலவு வைக்கவேண்டியபோதிலும் ஆர்எம்சீ/05-சீ ஆம் இலக்க பொதியில் ஐபீசீ-26 இற்காக செலுத்தப்பட்ட ரூபா 20.42 மில்லியன் மொத்தத்தொகை தவறுதலாக பிடிப்புக் கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டது. ஆகையால், பிடிப்பு பொறுப்பு கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | 14.58 | ஆர்எம்சீ/05-சீ ஒப்பந்தப்பொதியின் ஐபீசீ இலக்கம் 26 இற்கான ஒப்பந்தக் கொடுப்பனவு சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. எனினும், மேலதிக பதிவானது அதே ஐபீசீ கொடுப்பனவிற்காக ஜேஈ/23/2016 ஆல் பதிவு செய்யப்பட்டதுடன் எதிர்ப்பதிவு 2024 இல் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | ஆர்எம்சீ/01டீ பொதியின் ஒப்பந்தபாரர்களிடமிருந்து ரூபா 4.16 மில்லியன் அறவிடப்பட்ட ஆரம்ப முற்பணத்தொகையானது பிடிப்பு கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டிருந்தது. ஆகையால், ஆரம்ப முற்பணம் மற்றும் பிடிப்பானது அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | 4.16 | அந்த தவறான பதிவானது கோடிங் தவறால் இடம்பெற்றிருந்தமையால இது 2024 இல் சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 3.5 இன் பிரகாரம் 12 இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 2,668.47 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எனினும், அந்தத் தொகையானது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,618.47 மில்லியனாக நிகழ்ச்சித்திட்டத்தினால் உறுதிசெய்யப்பட்டிருந்தது.ஆகையால் இணக்கஞ்செய்யப்படாத மீதி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | 50.00 | 2023.12.31 இல் உள்ளவாறு 12 இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களின் தொகைகளுடன் தொடர்புடைய செயலாற்றல் முறிகளின் பெறுமதியானது ரூபா 2,618.47 மில்லியனாகவுள்ள அதேநேரம் இது நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் தவறுதலாக ரூபா 2,668.47 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | ஆர்எம்சீ 06-பீ பொதிக்குரிய பிடிப்புத் தொகையானது பிடிப்புக்கணக்கில் மீண்டும் கணக்கிடப்பட்டிருந்தது. ஆகையால், அதே தொகையால் நடைமுறைக்கணக்குகள் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.. | 13.15 | 2024 இல் ஆர்எம்சீ 06-பீ பொதியின் பிடிப்புக்கணக்கில் இரட்டிப்பாக காட்டப்பட்ட ரூபா 13.15 மில்லியன் தொகையினை திருத்துவதற்கு இணங்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகை காட்டப்பட வேண்டும். |
| (உ) | பிணக்குகள் இணக்க சபைக்கான கோரிய ஏற்பாட்டுத் தொகையானது ரூபா 3,176.90 தொகையானதுடன் ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் ஆய்வு உபகரணம் போன்றவற்றின் மற்றும் இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தகாரர்களின் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | 3,176.90 | கோரப்பட்ட தகவல்கள் வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இருந்தமையால் விபரங்களைச் சேர்ப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் உரிய நேரத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடிந்திருக்கவில்லை. | ஒவ்வொரு இணக்க விடயங்களுக்கும் தனிப்பட்ட கோவைகள் மற்றும் பதிவேடுகள் தனிப்பட்ட கோவைகள் மற்றும் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டியதுடன் அனைத்து ஒப்பந்த நிர்வாக ஆவணங்களும் பிணக்குகள் முடியும்வரை பேணப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தங்களின் விசேட நிபந்தனைகளின் 108.4 ஆம் உட்பிரிவு | ஒப்பந்த நிபந்தனைகளின் உட்பிரிவு 108.4 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் அனைத்து ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை | உற்பத்தியாளரின் சான்றுப்படுத்தல்கள் மற்றும் பொறியியலாளரின் பிரேரணை பிரகாரம் இரண்டாம் கை/ பயன்படுத்திய ஆய்வுகூட உபகரணத்தை | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனை ஒழுங்கான முறையின் அமுல்படுத்த முன்னர் மீளாய்வு செய்யப்படவேண்டும். ஊழியர் உரிமைகள் பணத்திற்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உபகரணங்கள் ஒப்பந்ததாரருக்குத் திருப்பியளிக்கப்படும் என்ற போதிலும் 2022 வரையிலும் ஆய்வுகூடம், தளபாடங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக ரூபா 397.77 மில்லியன் மொத்த தொகையாக செலுத்தப்பட்டுள்ளுமையை சான்றுகள் இன்மையால் உறுதிப்படுத்த முடியாமலிருந்ததுடன் இதனால் சாதகமான ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற நன்மைகளை ஏற்படுத்தலாம். | பயன்படுத்துவதற்கு ஒப்பந்தகாரர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆர்டிஏ ஆனது தற்போது போதியளவு ஆய்வுகூட உபகரணங்களையும் அத்தகைய உபகரணங்களுக்கான போதியளவு களஞ்சியத்தையும் கொண்டிருக்கவில்லை. மேலும் 3 வருடங்களின் பின்னர் உபகரணத்தை பயன்படுத்தியதன்பின்னரான பெறுமானத்தேய்வு மிகக்குறைவாகவிருந்தது. | பெறுமதியினை பேணுதல் மற்றும் ஒப்பந்த தாமத நன்மைகளை பெறுவதை தடுப்பதற்கு விலை மனு ஆவணங்களை மீளாய்வு செய்யும் போது விசேட கவனம் ஏபிசி மற்றும் பீசி ஆல் செலுத்தப்படவேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தலை மேற்பார்வை செய்து, கண்காணித்து, ஒருங்கிணைப்பதற்கு செயற்திட்ட வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். எனினும்,மீளாய்வாண்டின் போது ஒரேயொரு கூட்டம் மாத்திரம் நடைபெற்றிருந்தது. | குறிப்பிட்ட காலப்பகுதியின் போது வேலைகள் நிறுத்தப்பட்டமையினால் ஒழுங்கு அடிப்படையில் கூட்டங்கள் கூட்டப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணக்கப்படவேண்டும். |
| (இ) | 2017 திசம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(i)ஆம் பந்தி | பதிவு செய்யப்பட்ட உரிமையாண்மை இல்லாமல் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் உரிய பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அல்லது பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் அனுமதியுடன் பெறப்பட்ட பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு கையளிக்கப்படவேண்டும். எனினும் நிகழ்ச்சித்திட்டத்தால் ஆர்டிஏ இற்கு | ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து முறையான கோரிக்கைகள் பெறப்பட்ட பின்னர் ஆர்டிஏ ஆல் அவர்களுக்கு அத்தகைய வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. ஆர்டிஏ இன் 05 வாகனங்கள் தற்காலிக வாகனங்கள் தற்காலிகமாக அமைச்சின் செயற்பாடுகளுக்கு மாற்றப்பட்டு இருந்தது. எனினும் ஆர்டிஏ இன் இயக்குனர் சபை அனுமதி யை பெற்ற பின்னர் அத்தகைய வாகனத்தின் | வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கையளிக்கப்பட்ட வாகனங்களில் முறையாக உரிமையாண்மை இன்மையால் ஏனைய நிறுவனங்களால் 13 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது. ஆகையால் நிகழ்ச்சித்திட்ட இறுதிக்கு முன்னர் வாகனங்கள் கையளிக்கப்பட்டமையால் குறித்த நோக்கங்களை அடைய முடிந்திருக்கவில்லை. | உரிமையாண்மை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| **கூறு** | **செயற்பாடு** | **2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்** | | |
| | | **கிமீ** | **கிமீ** | | |
| தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு பணிகளை பூர்த்தி செய்தல். | தேசிய மற்றும் கிராமிய வீதிகள் | 3,275 **கிமீ** | 2,990 **கிமீ** | 165 கிமீ தேசிய வீதிகள் மற்றும் 2,825 கிமீ கிராமிய வீதிகளில் 370 கிமீ தேசிய வீதிகள் மற்றும் 2,905 கிமீ தேசிய வீதிகள் மாத்திரமே 09 ஆண்டுகள் கடந்த பின்னர் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | ஒப்பந்தகாரர்களில் பலர் அவர்களுடைய வேலையை நிறுத்தியமை ஒப்பந்தகாரின் மந்தமான செயற்பாடு ஒப்பந்த கொடுப்பனவுகளில் ஏற்பட்ட காலதாமதம் மந்தமான செயற்பாட்டின் பிரதான பங்களித்திருந்தது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | சில ஒப்பந்தகார் அவர்களுடைய கொடுப்பனவை ஐபீசி கொடுப்பனவில் ஏற்பட்ட நிச்சயமின்மையினால் நிறுத்தி வைத்திருந்தனர். சில ஒப்பந்தகார் மந்தமான செயற்பாட்டை பதிவு செய்திருநதுள்ளனர். எனினும் அரச கடனில் ஏற்பட்ட வரையறையால் முழு நோக்கத்தை செய்தல் சாத்தியமற்றதாகும். |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | குறித்த கால எல்லைக்குள் நிகழ்சித்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 05 மாகாணங்களிலுள்ள 12 ஒப்பந்த பொதிகள் உத்தியோகத்தர்களால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடைநிறுத்தப்படுவதுடன் அதற்காக மேற்கொண்ட ரூபா 2,793.41 மில்லியன் தொகையான ஆரம்ப முற்பணங்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிடமுடியாதுள்ளது. | எட்டு(8) ஒப்பந்தகளிற்கான தடை உத்தரவுகளால் முற்பண கொடுப்பனவின் அறவீடு நிறுத்திவைக்கப்பட்டது. | பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து முற்பண முறிகளை காசாக்கல் மூலம் அறவிடுவதற்கோ நட்டங்களை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் ஒழுங்காற்று நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும். |
| (ஆ) | உரிய உத்தரவாதர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,668.47 மில்லியன் தொகை உரிய உத்தரவாதர்களிடமிருந்து காசாக்கல் தொடர்பில் எடுக்கப்பட்ட காலதாமதங்களில் அறவிடமுடியாதிருந்தது. அதன் விளைவால் அத்தகைய காலதாமதங்கள் அத்தகைய உத்தரவாதங்களை காசாக்கலிற்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு சந்தர்ப்பமாக ஒப்பந்தகாரரால் அத்தகைய காலதாமதம் எடுக்கப்பட்டது. | தடை உத்தரவுகளால் செயலாற்றல் உத்தரவாதங்கள் காசாக்க முடிந்திருக்கவில்லை. | பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து முற்பண முறிகளை காசாக்கல் மூலம் அறவிடுவதற்கோ நட்டங்களை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் ஒழுங்காற்று நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 6,250.03 மில்லியன் ஆரம்ப முற்பணங்கள் ஒப்பந்தகாரரகளுக்குரிய கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டமை கடினமான வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பின் மீதி வேலைகள் நோக்கெல்லை இன்மையால் நிச்சயமற்றதாகவிருந்தது. | தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒப்பந்தகள் நிதி வரையறையால் விட்டுச்சென்றது. ஆகையால் முற்பணங்கள் திட்டமிடப்பட்டவாறு அறவிடப்பட முடிந்திருக்கவில்லை. நிலுவையிலுள்ள ஐபிசிகள் மற்றும் பிடிப்புப் பணத்தை ஒப்பந்தகாரர்களின் அனுமதியுடன் தீர்பனவு செய்வதன் மூலம் முற்பணங்களை அறவிடுவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பல கலந்துரையாடல்களை பீஎம்யு மேற்கொண்டிருந்தது. | கொள்கை தயாரிப்பாளர்கள கடன் மீள்பட்டியல் விளைவு பற்றி கவனம் எடுக்கவேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனையை மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் 14.7 ஆம் உபபிரிவின் பிரகாரம் 56 நாட்களுக்குள் ஒவ்வொரு ஐபிசி இல் சான்றுப்படுத்தப்பட்ட தொகையை ஊழியர் செலுத்தப்பட முடிந்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் வேலைகளுக்காக செலுத்தப்பட வேண்டியவை ரூபா 2,671.28 மில்லியனாகவிருந்தது. மேலும் ஒப்பந்தத்தின் நிபந்தனையின் 14.8 ஆம் உபபிரிவின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலதாமத வட்டியாக ரூபா 284.77 மில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஒப்பந்தகாரர்களுக்குரிய கொடுப்பனவு காலதாமதம் அரசாங்கத்திற்கு மேலதிக கிரயத்தையும் சுமையும் ஏற்படுத்தும். | வேலைகள் 2023 ஆரம்பத்தில் நிறுத்தப்பட்டதுடன் பல ஐபீசீ கொடுப்பனவுகள் போதிய பணமின்மையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எனினும், ஐவீதி2 நிகழ்ச்சித்திட்டத்தின் கிளை 4 கடனினைப்பெற்ற பின்னர் அனைத்து ஐபீசீக்களும் தீர்ப்பனவு செய்யப்படும். ஆனால், காலதாமதக் கட்டணத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகள் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் செலுத்தவேண்டியுள்ளது. | காலதாமத வட்டியினைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கோரிக்கைகளின் சரித்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 வாகனப்பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகரம், நிகழ்ச்சித்திட்டமானது 168 மோட்டார் சைக்கிள்களை உள்ளடக்கி 335 மோட்டார் வாகனங்களை ரூபா 1,499.58 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்ததுடன் அத்தகைய வாகனங்களில் பல வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அவற்றில் 08 மோட்டார் வாகனங்கள் மற்றும் 09 மோட்டார் சைக்கிள்கள் தற்போது ஐவீதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| **இல.** | **கணக்காய்வு விடயங்கள்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | ரூபா 7.47 மில்லியன் கிரயத்தில் கேஎல்-01 ஒப்பந்த பொதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட டபிள் கப் உரிய பொதியின் வீதி புனரமைப்பு பூர்த்தியடைந்த பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்க முன்னர் 2019 திசெம்பர் 07 இல் விபத்தொன்றைச் சந்தித்திருந்தது. திருத்துனரால் கொடுக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம், மதிப்பீட்டுக் கிரயம் ரூபா. 6.93 மில்லியனாகவுள்ளதுடன் காப்புறுதியாளரால் பொறுப்பேற்கப்பட்ட கிரயம் மிகுதி ரூபா. 4.00 மில்லியனாகவிருந்தமையால் ரூபா.2.93 மில்லியனை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரர் மற்றும் வாகனத் திருத்துனர்களுக்கு இடையில் 2024 மார்ச் 28 இல் இடம்பெற்ற கூட்டத்தில் 04 மாதங்கள் காலப்பகுதிக்குள் திருத்தங்களை பூர்த்திசெய்வதற்கு திருத்துனர்கள் இணங்கப்பட்டது. | உரிய தரப்பினர்களிடமிருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104 ஆம் இலக்கத்தின் பிரகாரம் உரிய தரப்பினர்களினை கண்டுபிடிப்பிற்குரிய இறுதி புலனாய்வுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனத்தின் விபத்து தொடர்பாக ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டதுடன் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களுடன் இணங்குவதுடன் காலதாமதத்திற்காக உரிய உத்தியாகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வீதிப்புனரமைப்பு வேலைகள் முடிவடைவதற்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 335 வாகனங்களில் 318 வாகனங்கள் ஆர்டீஏக்கு கையளிக்கப்பட்டிருந்தபோதிலும் மீளாய்வாண்டின் போது பீஎம்யூ மற்றும் மாகாண அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக பதினான்கு(14) வாகனங்கள் வாடகைக்கமர்த்தப்பட்டதுடன் அத்தகைய வாகனங்களின் வாடகையாக 2023 திசெம்பர் 15 இல் உள்ளவாறு ரூபா.16.36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால், நன்கொடையாளர்களிடமிருந்து சிரமமான வேலைகளின் புனரமைப்பிற்காக பெறப்பட்ட வரையறுக்கப்பட்ட நிதிக்கு இது மேலதிக சுமையை ஏற்படுத்தியிருந்தது. | மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஆர்டீஏ வாகனங்களில் போதியளவு இல்லாதிருந்தமையால் பதினான்கு(14) வாகனங்கள் மாகாணங்கள் மற்றும் செயற்திட்ட ஒருங்கிணைப்புக்களிலுள்ள வேலைகளுக்கான பெறுகைச் செய்முறையினை பின்பற்றி வாடகைக்கு எடுக்கப்பட்டது. | தவறான முகாமைத்துவம் மற்றும் சொத்துக்களின் தவறானப்பயன்பாடு போன்றவற்றிற்கான பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

**3.4 மேலதிகக் கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 248.27 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.4 மில்லியன் தொகையான திரண்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்படாத கடன் பெறுவனவுகளில் கடன் வழங்கும் முகவராண்மைக்கு சிக்கனமற்ற முறையில் நிகழ்ச்சித்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | கடன் உடன்படிக்கையின் 0.15 ஆம் நிபந்தகைனகளின் பிரகாரம் கடப்பாட்டுக் கட்டணங்கள் வினைத்திறனான கடனின் பயன்படுத்தப்படாத தொகை மீது கழிக்கப்பட்டது. | கடன் நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பயன்படுத்தப்படாத வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொதுவாக பல் நிதி வசதியின் கீழ் நேரத்திற்கு நேரம் பல கிளைகளிடமிருந்து ஐ.அ.டொலர் 800 மில்லியன் நன்கொடையாளரிடமிருந்து பொதுவாக விடுவிக்கப்பட்டிருந்தது. நன்கொடையாளர் அவர்களுடைய முறையான வழங்கல் முறைமையின் பிரகாரம் நான்கு கிளைகளின் கீழ் ஐ.அ.டொலர் 557 மில்லியனை 2023 திசெம்பர் 31 இற்கு முன்னர் விடுவித்தது. எவ்வாறெயினும், பேரினப்பொருளியல் நெருக்கடியினால் செய்முறை இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர், ஏற்கனவே தொடங்கப்பட்ட கடினமான வேலைகளையும் முடிவடையாதுள்ள வீதி பிரிவுகளையும் ஆரம்பிக்கப்படாத விதிகளின் பராமரிப்பினையும் ஐவீதி மற்றும் இரண்டாந்தர ஐவீதி நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு தொடர்பிலான கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் இரண்டாந்தர வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கிளை 4 இன் கீழ் ஐ.அ.டொலர் 60 மில்லியனை மேலும் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் 01 தொடக்கம் 04 கிளைகளின் மீது கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையிலிருந்து 09 வருடங்கள் கடந்த பின்னர் ரூபா.104,000 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 800 மில்லியன் கடன் தொகையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா.97,178.01 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 543.67 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,376.64 மில்லியன் தொகை சிவில் வேலைகளுக்காக ஐவீதி II நிகழ்ச்சித்திட்டத்தின் 4 ஆம் கிளையின் கீழ் பெறப்பட்ட நிதியங்களின் மூலம் சிவில் வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | 10 வருட அமுலாக்க காலப்பகுதியினுள் பல் பகுதி நிதி வசதியின்(எம்எவ்எவ்) மூலம் நிகழ்ச்சித்திட்டம் நிதியிடப்படுகின்றது. ஐ.அ.டொலர் 243 மில்லியனிற்காக கடைசி இரண்டு கிளைகள் அரச கடனின் வரையறையினால் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டமையால் இடைநிறுத்தப்பட்டது. அண்மையில் ஐவீதி 1 இன் செலவீனத்திற்கான ஏற்பாட்டை ஐவீதி 2 கிளை 4 அண்மையில் அனுமதித்ததுடன் அதற்கிணங்க ஐவீதி1 இற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நோக்கெல்லையில்லாத ஒதுக்கீட்டை இனங்காண்பதற்கான நடவடிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு முறையான செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா.22,020 மில்லியன் தொகை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் உண்மையான செலவீனம் ரூபா.5,768.78 மில்லியனாகவிருந்தது. ஆகையால், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக்கள் ரூபா.16,251.22 மில்லியனாகவிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் அடுத்த கடன் பகுதி பெறும் வரை வேலைகளின் தற்காலிகத்திற்கு ஒப்பந்தகாரர் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். ஐவீதி2 இன் கிளை 4 கடனானது 2023 திசெம்பர் 03 இலிருந்து செயற்பாட்டிலிருந்தது. ஆகையால் உள்ளபடியான செலவீனம் எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைவாகவிருந்தது. | ஒதுக்கீட்டுகளை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வினைத்திறனான நடவடிக்கைகள் காலதாமதமில்லாமல் அடைவதற்கு வினைத்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுப்பனவுகள்.

**ஐ வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பலாங்கொட – போவத்த – கல்தோட்ட வீதியின் புனரமைப்பு**

2022 ஆம் ஆண்டில் ஆர்எம்சீ 04 ஆம் பொதியின் கீழுள்ள பல்மடுல்ல - எவில்பிற்றிய-னோனாஹம வீதியின் முரண்பாடாக பலாங்கொட – போவத்த – கல்தோட்ட வீதி 2022 இல் மீள்புனரமைக்கப்பட்டது. இந்த வீதியின் 16 கிலோமீற்றர் மொத்த நீளம் பெல்மடுவல-எம்பிலிப்பிற்றிய-னோனாகம வீதியின் புனரமைப்பு வேலைகள் ஏற்கனவே வழங்கப்பட்ட அதே 04 ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள |
|---|---|---|---|
| (அ) | நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் நன்கொடையாளரின் இணக்கத்திற்கு இணங்க மீள்புனரமைப்பு வேலையினை அனுமதித்து பெறுகைச் செயன்முறையை பின்பற்றியிருந்தபோதும் அத்தகைய அனுமதிகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படாததுடன் நிர்மாணங்களானது உரிய பெறுகைச் செய்முறையைப் பின்பற்றாமல் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வீதியானது ஆரம்பத்தில் இனங்காணப்பட்டதுடன் ஐ வீதி நிகழ்ச்சித்திட்டம் ஆர்எம்சீ ஒப்பந்தங்களின் கீழ் புனரமைப்பதற்கு பிரேரணை செய்யப்பட்டது. அதற்கிணங்க, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியுடன்(என்பீடீ) மற்றும் வெளிவாரி வளங்கள திணைக்களத்தின் (ஈஆர்டீ) பிரேரணையுடனும் ஐ வீதி ஐ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளடக்குவதற்கு ஏடீபீயின் அனுமதி பெறப்பட்டது. பீஎம்யூ ஆனது விலை மனுக்களை கோரும் செய்முறையிலும் ஆவணங்களை முடிவுறுத்தும் செய்முறையிலுமுள்ளது | பெறுகை வழிகாட்டி நிபந்தனைகளுடன் இணங்குதல் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்காமைக்காக உரிய உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதற்கு மேலதிகமாக, இந்த வீதி ஐ வீதியின் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப வேலைத்திட்டத்திற்கு முரணாக குருநகல் ஆலயத்தில் தேசிய வெசாக் கொண்டாட்டத்தின் நோக்கத்திற்காக இந்த வீதி மீள்புனரமைக்கப்பட்டது. | தேசிய வெசாக் கொண்டாட்டத்தின் அறிவிப்பால் இந்த வீதியின் புனரமைப்பிற்கான உடனடி தேவைப்பாடு முக்கியம் வாய்ந்ததாகவிருந்தது. ஆகையால், செயலாளர் இந்த வீதிபப்பிரிவின் அருகாமையில் | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் புனரமைப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 04 ஒப்பந்தகாரர்களில் 02 பேர் இணங்கப்பட்ட காலப்பகுதியின் போது அவர்களுடைய சிவில் வேலைகளை நிறைவு செய்ததுடன் மீதமாகவுள்ள இரண்டு ஒப்பந்தங்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்படாமலுள்ளது. எனினும், ஒப்பந்தகாரரடகளுக்கு செலுத்தவேண்டிய தொகை மற்றும் கொடுப்பனவிற்கான அனுமதி கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேலைசெய்கின்ற ஆர்எம்சீ/04 ஒப்பந்தகாரர்களுக்கு வேறுபாட்டு கட்டளைகளை வழங்குவதன் மூலம் வேலைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, வேலைகளை முடிப்பதற்கு 4-5 மாதங்கள் இருப்பதால் உடனடியாக வேலைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டது. | காலதாமதமில்லாமல் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஒப்பந்தகாரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஆரம்ப விசாரணை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன் 2023 நவம்பர் 30 இல் உரிய அறிக்கை பணிபாபளர் நாயகத்தால் (பொறியியல்) சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், இந்த விசாரணையின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதே நேரம் போதிய கடன் இன்மையால் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.<br><br>எனினும், இது உடனடியாக முறைப்படுத்தப்பட வேண்டும். | காலதாமதமில்லாமல் விசாரணையை மேற்கொள்ளவதற்கும் உரிய தரப்பினரை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேணடும். |